











# 2013

## වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## Annual Performance Report

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை- 2013

கல்வி அமைச்சு

அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 402 இல் 2.4.1 வாசகத்துக்கு அமைய பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

2014 பெப்ரவரி


மேற்பார்வை மற்றும் செயற்சாதனை மீளாய்வுக்களை
திட்டமிடல் மற்றும் செயற்சாதனை மீளாய்வு பிரிவு
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

## கல்வி செயலாளரின் வாழ்த்து செய்தி,

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கினை வெற்றி கொள்ளும் வகையில் கல்வியை மீள் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை அர்த்தபூர்வமாக மாற்றியமைப்பதற்கான துரித வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ள கால எல்லையில் கல்வி அமைச்சின் ஒரு வருடத்தின் செயற்சாதனையினை சித்திரித்து காட்டும் வகையில் வருடாந்த செயற்சாதனை அறிக்கை 2013 இனை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

தேசிய கல்வி கொள்கைக் கோட்பாடு மற்றும் புதிய கல்வி சட்டத்தை தயாரிக்கும் செயற்பாடுகள் விரிவான ஆய்வுகள் ஊடாக சகல தரப்பினரினதும் கருத்துக்களைப் பெற்று வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தமை இவ்வாண்டில் நாம் பெற்ற பாரிய வெற்றியாகும்.

போட்டிகரமான கல்வி முறைமையில் புத்தகங்களினால் பெறும் கல்வி மாத்திரம் தனிநபர் முன்னேற்றத்துக்கு காரணமாக அமையாது என்பதனை புரிந்து ஆக்கதிறனுக்கு சந்தர்ப்பம் வழங்கக் கூடிய வகையில் பிரயோக கற்றல் முறையினை பயன்படுத்தி பிள்ளைகளை அதில் ஈடுபடுத்த கூடிய மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் அடிப்படை உள்ளீடான மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மானித்தல் மற்றும் அதற்கு தேவையான நவீன உபகரணங்களை வழங்குதலும் ஆசிரியர் வளத்தை வலுவூட்டுவதும் கடந்த ஆண்டில் கல்வி அமைச்சினால் எட்டப்பட்ட செயற்சாதனைகளின் முக்கிய அம்சங்களாகும் .

பிள்ளைகளின் உயர்ந்த பட்ச இயலுமைகளை விருத்தி செய்து உயரிய வாழ்க்கை முறைக்கு ஈடுபடுத்த மற்றும் சமூகத்துக்கு பயன்மிக்க வழிகாட்டல்களை வழங்கல் மற்றும் அதற்கு தேவையான அடித்தளத்தை இடுவது தொடர்பாக பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை தொடர்ந்தும் வலுவூட்டி தேசிய தொழில்சார் தகைமையுடன் இணைந்த க.பொ.த (உ.த) தொழில்நுட்ப பாடவிதானம் 250 பாடசாலைகள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டமை இந்நாட்டின் கல்வியில் திருப்பு முனையாக அமைந்துள்ளது.

கல்வி துறையின் தொழில்சார் சேவைகள் மற்றும் அதனுடன் இணைந்த நீண்டகாலமாக காணப்பட்ட பிரச்சினைகளுக்காக நீடித்த நிரந்தர தீர்வுகளை எட்டி சகல தரப்பினரதும் கருத்துக்களை பெற்று திட்டமிட்ட செயற்பாடுகள் ஊடாக இதனை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விஷேடமாக குறிப்பிடுகிறேன்.

நவீன அறிவு மற்றும் திறமைகளை போன்று அறிவு பண்பினை போசிக்க கூடியவாறு இளம் சந்ததியினரை உருவாக்க இது தொடர்பான ஆர்வத்துடன் சகல பக்கதோற்றங்கள் ஊடாகவும் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து சிறந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு செய்ய கல்வி அமைச்சு தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அனுர திகாநாயக்க
செயலாளர்
கல்வி அமைச்சு

**கல்வி அமைச்சின் பிரதான பிரிவுகள், பதவிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் (2013.12.31 தினமன்று)**

**கல்வி அமைச்சர்**

கௌரவ பந்துல குணவர்தன அவர்கள்

**பிரதி அமைச்சர்**

கௌரவ மொஹான்லால் கிரேறு அவர்கள்

**கல்விச் செயலாளர்**

அனுர திசாநாயக்க அவர்கள்

**திட்டமிடல் மற்றும் செயற்சாதனை மீளாய்வு பிரிவு**

மேலதிக செயலாளர் -திரு.எஸ்.யு.விஜேரத்ன

**கல்வி பண்புசார் விருத்தி பிரிவு**

மேலதிக செயலாளர் -திரு.எச்.யு.பிரேம திலக்க

**கல்விச் சேவை தாபனப் பிரிவு**

மேலதிக செயலாளர் -திரு.உபாலி மாரசிங்க

**பாடசாலை வழங்கல், சேவை மற்றும் நிர்மாண பிரிவு**

மேலதிக செயலாளர் (பதில்) - திரு.என்.எச்.எம்.சித்ரானந்த

**நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு**

மேலதிக செயலாளர் - திரு.என்.எச்.எம்.சித்ரானந்த

பிரதம கணக்காளர் - திருமதி.எஸ்.என்.சமரசிங்க

# உள்ளடக்கம்

## 1. கல்வி அமைச்சின் பொறுப்புக்கள்


நோக்கு மற்றும்
பணிக்கூற்று 1
1.1 கல்வி அமைச்சின் பொறுப்புக்கள் 1
1.2 கல்வி அமைச்சின் செயற்பாட்டு பணிகள் 2
1.3 கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள் 2


## 2. மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு அதன் கொள்ளை கோட்பாடு மற்றும் தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு


2.1 விரிவான நோக்கு கொண்ட கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள் 3
2.2 கல்வித்துறை சார் அபிவிருத்தி கோட்பாடு மற்றும் வேலைத்திட்டம் 2013 - 2017 4
2.3 புதிய கல்விக் கொள்ளைகளை அமுல்படுத்தல் 6
2.4 அபிவிருத்தி இலக்கினை நிறைவேற்றுவதற்காக அரச தலைவர்களின் வழிகாட்டல்கள் 6


## 3. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் சம நியாயப் பிரவேசம் மற்றும் பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள்


3.1 மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகளை மீள்கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம் 9
3.2 ஆரம்ப பாடசாலை வலையமைப்பு சிறுவர் நட்புறவு பிரவேசத்திற்கமைய அபிவிருத்திகள் 14
3.3 விசேட அபிவிருத்தி தேவைகள் கொண்ட பாடசாலைகளுக்கான வேலைத்திட்டம் 16
3.4 பிரிவெனா கல்வி 17
3.5 முறைசாரா கல்வி 18
3.6 விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளக்கான மூக்குக்கண்ணாடி மற்றும் செவிப்புலன்கள் வழங்கல் 18
3.7 மாணவர் நலன்புரி வேலைத்திட்டம் 19


## 4. பாடவிதானம் மற்றும் பாட இணை வேலைத்திட்டங்களை அமுல்படுத்தும் அபிவிருத்தி பிரவேசம்


4.1 ஆரம்ப கல்வியின் பண்பு சார் விருத்தி 21
4.2 கணிதக்கல்வியினை மேம்படுத்தம் விசேட வேலைத்திட்டம் 22
4.3 விஞ்ஞான கல்வியின் புதிய எழுச்சி 23
4.4 கல்வியினை பதிய திசையினை குறித்து காட்டும் வகையில் க.பொ.த (உ.த) இற்கான
தொழில் நுட்ப பாட விதானத்தை அறிமுகப்படுத்தல் 24
4.5 தகவல் மற்றும் தொடர்பு சாதன தொழில் நுட்ப கல்வி துறையின் முன்னேற்றங்கள் 25
4.6 மாணவர்களுக்கிடையே மும்மொழி திறமையினை விருத்தி செய்தல் 26
4.7 மானிட சாஸ்திர பாடங்கள் ஊடாக அறிவு திறமை சிந்தனை விருத்தி 27
4.8 வர்த்தக பாடத்தை கற்ப்பிப்பதற்கான பதிய பிரவேசம் 27
4.9 விவசாய அபிவிருத்தி மற்றும் சூழல் பாதுகாப்பிற்கான மாணவர் திறமை விருத்தி 28
4.10 சகல மாணவர்களுக்கும் விளையாட்டினை கட்டாயப்படுத்தல் 29
4.11 சமய நல்லினக்கம் மிக்க விழுமியத்தை பாதுகாக்கும் பரம்பரை 29
4.12 மாணவ ஆளுமை விரத்திக்க உதவும் வேலைத்திட்டங்கள் 30
4.13 அழகியல் திறமையினை விருத்தி செய்தல் 31

## 5. கல்வி தொழில் சார் சேவையினை வலுவூட்டல்


5.1 இலங்கை ஆசிரியர் சேவைக்கு சேர்த்து கொள்ளல் 33
5.2 ஆசிரிய கல்வி மற்றும் ஆசிரிய அபிவிருத்தி 34
5.3 இலங்கை அதிபர் சேவையில் சேர்த்து கொள்ளல் 35
5.4 இலங்கை ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளல் 35
5.5 இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு சோர்த்து கொள்ளல் 35
5.6 பல்வேறுபட்ட தொழில் சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 36
5.7 ஆலோசனை கோவை மற்றும் சுற்றறிக்கையினை வெளியிடல் 36
5.8 வெளிநாட்டு பயிற்சி கருத்தரங்குகளுக்கான பங்கேற்பு 37


## 6. திட்டமிடல் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையினை வலுவூட்டல்


6.1 மாகாண சபையுடன் வலுவாக இணக்கங்கள் 39
6.2 தனியார் பாடசாலை முகாமைத்துவ அபிவிருத்தி 39
6.3 கல்வி அபிவிருத்திக்கான பங்களிப்பு வழங்கும் நிறுவனங்களை வலுவூட்டல் 40
6.4 பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் செயற்பாடுகள் 40
6.5 உற்பத்தி திறன் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் 41
6.6 கல்வி ஆராட்ச்சி பிரவேசம் 41
6.7 கல்வி முகாமைத்துவ தகவல் முறமை 41
6.8 நீண்ட கால கட்டமைக்கப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விசேட செயற்பாடுகள் 42


## 7. நிதி முதலீடு மற்றும் செலவினம்


7.1 மீண்டெழும் செலவினம் 43
7.2 மூலதன செலவினம் 44
7.3 மொத்த கல்வி செலவினம் 44
7.4 நிர்மானத்திற்கான முதலீடு 45
7.5 தளபாட உபகரணங்களுக்கான முதலீடு 46


## 8. வெளிநாட்டு உதவி முதலீடு


8.1 அறிவு சார் சமூகத்திற்கான கல்வி செயற்றிட்டம் - ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி 49
8.2 அறிவு சார் பொருளாதாரத்திற்கான மானிட மூலதனத்தை அடிப்படையாக கொண்டதாக பாடசாலை முறைமையினை மாற்றியமைத்தல் - உலக வங்கி உதவி வேலைத்திட்டம் 51
8.3 ஏனைய வெளிநாட்டு உதவி பெற்ற வேலைத்திட்டம் 52


## 9. மாணவர் அடைவு மட்டம்


9.1 5ம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் அடைவு மட்டம் 53
8.2 க.பொ.த.(சா.த) பரீட்சையில் மாணவர் அடைவு மட்டம் 53
8.3 க.பொ.த(உ.த) பரீட்சையில் மாணவர் அடைவு மட்டம் 54
9.4 மாணவர் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் 54
9.5 8ம் தரத்தின் மாணவர் அடைவு மட்டம் தொடர்பான தேசிய மதிப்பீடு 55


## இணைப்பு


இணைப்பு 1 : 2013 ம் ஆண்டில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை 59
இணைப்பு 2 : கல்வி அமைச்சின் சிரேஷ்ட பதவி மற்றும் உத்தியோகத்தர்கள் 2013.12.31ம் திகதியன்று 61

# பிரதான கல்வியின் புள்ளிவிபரங்கள் மற்றும் சுட்டிகள்

# பிரதான புள்ளிவிபரங்கள் மற்றும் சுட்டிகள்

| சுட்டிகள் | 2005 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| **பாடசாலை (a)** | | | | | | |
| அரச பாடசாலைகளின் எண்ணிக்கை | 9727 | 9,662 | 9410 (t) | 9,685 | 9,731 | 9,905 |
| பாடசாலை வகை கூட்டுக்கமைய (b) | | | | | | |
| 1ஏபீ பாடசாலை | 646 | 698 | 702 | 716 | 716 | 753 |
| 1சீ பாடசாலை | 1,810 | 1,937 | 1,944 | 2,005 | 2,027 | 2,013 |
| வகை 2 பாடசாலை | 4,237 | 4,166 | 4,043 | 4,094 | 4,045 | 3,869 |
| வகை 3 பாடசாலை | 3,034 | 2,861 | 2,721 | 2,870 | 2,943 | 3,270 |
| நிர்வாக அதிகாரிக்கு அமைய | | | | | | |
| தேசிய பாடசாலை | 324 | 330 | 333 | 340 | 342 | 342 |
| மாகாண பாடசாலை | 9,403 | 9,332 | 9,077 | 9,345 | 9,389 | 9,563 |
| கற்பித்தல் நெறிக்கு அமைய | | | | | | |
| சிங்களம் மாத்திரம் | 6,500 | 6,388 | 6,369 | 6,390 | 6,312 | 6,368 |
| தமிழ் மாத்திரம் | 2,825 | 2,791 | 2,518 | 2,783 | 2,808 | 2,914 |
| சிங்களம் மற்றும் தமிழ் மாத்திரம் | 40 | 41 | 57 | 45 | 60 | 39 |
| சிங்களம் மற்றும் ஆங்கிலம் மாத்திரம் | 249 | 305 | 320 | 327 | 371 | 403 |
| தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத்திரம் | 86 | 109 | 111 | 106 | 138 | 152 |
| சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத்திரம் | 27 | 28 | 35 | 34 | 42 | 29 |
| அமைவிடத்திற்கு அமைய (c) | | | | | | |
| நகரம் | - | - | - | 951 | 1043 | 1071 |
| கிராமம் | - | - | - | 8,734 | 8,688 | 8,834 |
| மாணவர் எண்ணிக்கைக்கு அமைய | | | | | | |
| 1 - 50 | 1,533 | 1,554 | 1,510 | 1,590 | 1,609 | 1,652 |
| 51 - 500 | 5,878 | 5,793 | 5,668 | 5,867 | 5,892 | 5,990 |
| 501 - 2500 | 2,153 | 2,149 | 2,058 | 2,041 | 2,033 | 2,069 |
| 2501 - 5000 | 156 | 158 | 166 | 178 | 186 | 183 |
| 5000 விட கூடுதலாக | 7 | 8 | 8 | 9 | 11 | 11 |
| தனியார் பாடசாலை எண்ணிக்கை (d) | 60 | 70 | 72 | 72 | 73 | 73 |
| விஷேட பாடசாலை எண்ணிக்கை (e) | 25 | 24 | 26 | 26 | 25 | 25 |
| பிரிவெனாக்களின் எண்ணிக்கை | 652 | 691 | 697 | 719 | 720 | 734 |
| **ஆசிரியர்கள் (a)** | | | | | | |
| அரச பாடசாலைகளில் ஆசிரியர் எண்ணிக்கை | 187,339 | 212,683 | 213,694(t) | 214,562 | 219,886 | 223,333 |
| ஆண் பெண் பாலுக்கு அமைய | | | | | | |
| பெண் | | 150,670 | 151,825 | 152,717 | 157,279 | 160,544 |
| ஆண் | | 62,013 | 61,869 | 61,845 | 62,607 | 62,789 |
| தகைமைகளுக்கு அமைய | | | | | | |
| பட்டதாரி | 51,929 | 74,218 | 77,321 | 78,336 | 80,943 | 86,751 |
| தொழில்சார் தகைமை கொண்ட (f) | | 47,825 | 50,825 | 48,692 | 50,110 | 51,814 |
| தொழில்சார் தகைமை இன்றி | | 26,393 | 26,496 | 29,644 | 30,833 | 34,937 |
| பயிற்சி ஆசிரியர்கள் (g) | 127,936 | 127,382 | 124,819 | 126,652 | 128,700 | 128,152 |
| பயிற்றப்படாத/பயிலுனர்/ஏனையவை | 7,474 | 11,083 | 11,554 | 9,574 | 10,243 | 8,430 |

# பிரதான புள்ளிவிபரங்கள் மற்றும் சுட்டிகள்

| சுட்டிகள் | 2005 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| தொழில்சார் தகைமை கொண்ட ஆசிரியர்களின் விகிதாசாரம் (h) | - | 83 | 82 | 82 | 81 | 81 |
| ஆசிரிய மாணவர் விகிதாசாரம் | 21 | 18 | 18 | 18 | 18 | 18 |
| தேசிய கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை | 17 | 17 | 17 | 18 | 18 | 18 |
| ஆசிரிய கல்லூரிகளின் எண்ணிக்கை | 10 | 10 | 9 | 9 | 9 | 9 |
| | | | | | | |
| **மாணவர்கள் (a)** | | | | | | |
| அரச பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை | 3,942,412 | 3,929,234 | 3,860,176 (t) | 3,940,072 | 3,973,847 | 4,004,086 |
| ஆண் பெண் பாலுக்கமைய | | | | | | |
| பெண் | 1,964,355 | 1,979,193 | 1,947,066 | 1,988,917 | 2,005,015 | 2,018,803 |
| ஆண் | 1,978,057 | 1,950,041 | 1,913,110 | 1,951,155 | 1,968,832 | 1,985,283 |
| பிரதான செயற்பாடுகள் செயற்பாட்டு ஊடங்களுக்கு அமைய | | | | | | |
| சிங்களம் | 2,922,157 | 2,858,307 | 2,876,687 | 2,875,283 | 2,895,475 | 2,920,720 |
| தமிழ் | 1,020,255 | 1,017,789 | 929,304 | 1,007,449 | 1,016,602 | 1,020,008 |
| இடைநிலை மொழி (w) | | 53,138 | 54,185 | 57,340 | 61,770 | 63,358 |
| கற்றல் சுற்றுக்கமைய | | | | | | |
| ஆரம்பம் (1-5) தரம் | 1,611,132 | 1,631,645 | 1,617,330 | 1,672,809 | 1,683,829 | 1,698,510 |
| கனிஷ்ட இடைநிலை (6 - 9) தரம் | 1,339,182 | 1,259,359 | 1,206,436 | 1,220,123 | 1,226,969 | 1,245,609 |
| சிரேஷ்ட இடைநிலை (10 - 11) தரம் | 620,246 | 638,033 | 615,954 | 610,492 | 602,049 | 591,087 |
| சிரேஷ்ட இடைநிலை ( 12 –13 ) தரம் | 371,852 | 400,197 | 420,456 | 436,648 | 461,000 | 468,880 |
| பிரிவெனாக்களின் எண்ணிக்கை | 55,279 | 56,167 | 58,067 | 62,021 | 62,861 | 64,608 |
| தேரர் | 30,434 | 31,249 | 32,224 | 33,700 | 33,964 | 35,019 |
| தேரர் அல்லாத | 24,845 | 24,918 | 25,843 | 28,321 | 28,897 | 29,589 |
| விஷேட கல்வி பிரிவுகளின் மாணவர் எண்ணிக்கை | | 5,149 | 4,911 | 5,251 | 5,128 | |
| தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை (i) | 105,048 | 115,094 | 114,974 | 117,362 | 121,764 | 125,669 |
| **பிரவேசம் மற்றும் பங்களிப்பு** | | | | | | |
| **அரச பாடசாலைகளில் ( முதலாம் தரத்துக்கு) சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை** | 318,089 | 326,466 | 323,422 | 331,992 | 331,344 | 339,142 |
| **ஆரம்ப கல்விக்கு ( முதலாம் தரத்துக்கு) பிரவேச விகிதாசாரம்** (k) | 94.3 | - | - | - | - | 98.3 |
| பெண் | 93.1 | - | - | - | - | 98.2 |
| ஆண் | 95.2 | - | - | - | - | 98.4 |
| ஆரம்ப சுற்றில் ( 1 - 5 ) தரத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட விகிதாசாரம் (l) | 96.1 | - | - | - | - | 99.9 |
| பெண் | 94.3 | - | - | - | - | 99.6 |
| ஆண் | 99.1 | - | - | - | - | 100.2 |
| கனிஷ்ட இடைநிலை சுற்றில் ( 1-9) தரத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட தேறிய விகிதாசாரம் (m) | 93.4 | - | - | - | - | 100.3 |
| பெண் | 95.5 | - | - | - | - | 99.6 |
| ஆண் | 92.4 | - | - | - | - | 98.2 |
| சிரேஷ்ட இடைநிலை சுற்றில் ( 1-11) தரத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட விகிதாசாரம் (n) | | | | | | 98.6 |
| பெண் | - | - | - | - | - | 98.2 |
| ஆண் | - | - | - | - | - | 99.0 |

# பிரதான புள்ளிவிபரங்கள் மற்றும் சுட்டிகள்

| சுட்டிகள் | 2005 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| **பிரவேசம் மற்றும் பங்களிப்பு** | | | | | | |
| 9 ம் தரம் வரை தங்கியுள்ளோரின் எண்ணிக்கை | - | 86.7 | 87.7 | 87.3 | 88.0 | 92.1 |
| பெண் | - | 89.8 | 90.6 | 89.9 | 90.4 | 94.1 |
| ஆண் | - | 83.7 | 84.8 | 84.7 | 85.6 | 90.1 |
| **மாணவர் செயற்சாதனை** ( p) | | | | | | |
| 5 ம் தரத்தில் புலமை பரிசில் பரீட்சையில் மாணவர் அடைவு மட்டம் | | | | | | |
| 200 புள்ளிகளை 70ற்கு மேற்பட்ட அளவு பெற்ற மாணவர் எண்ணிக்கை | | 39.5 | 57.6 | 56.2 | 65.1 | 64.3 |
| 200 புள்ளிகளில் 100 புள்ளியை விட பெற்ற மாணவர் விகிதாசாரம் | | 15.4 | 34.3 | 32.1 | 41.0 | 39.3 |
| க.பொ.த (சா.த) பரீட்சையில் அடைவு மட்டம் | | | | | | |
| க.பொ.த (உ.த) இற்காக தகைமை பெற்றுள்ள மாணவர் விகிதாசாரம் | 47.7 | 56.8 | 52.5 | 60.6 | 60.8 | 64.7 |
| சித்தியடைந்த விகிதாசாரம் | | | | | | |
| கணிதம் | 43.2 | 51.0 | 50.9 | 60.3 | 55.3 | 55.3 |
| விஞ்ஞானம் | 53.4 | 47.4 | 48.2 | 61.7 | 62.4 | 68.2 |
| ஆங்கிலம் | 34.9 | 30.6 | 37.6 | 42.3 | 44.5 | 47.7 |
| க.பொ.த (உ.த) பரீட்சையில் மாணவர் அடைவு மட்டம் | | | | | | |
| பல்கலைகழக பிரவேசத்துக்கு தகைமை பெற்று மாணவர் விகிதாசாரம் | | | | | | |
| உயிரியல் | 32.8 (u) | 35.3 (u) | 38.5 (u) | 38.8 (u) | 50.6 (v) | 53.8 (v) |
| பௌதீகவியல் | 34.0 | 33.8 | 33.1 | 36.2 | 46.2 | 44.7 |
| வர்த்தகம் | 56.4 | 63.2 | 60.4 | 58.4 | 53.9 | 72.3 |
| கலை | 60.5 | 68.3 | 64.8 | 64.3 | 67.8 | 67.7 |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** (q) | | | | | | |
| க.பொ.த (உ.த) விஞ்ஞான ஆய்வுகூடம் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை | 646 | 698 | 702 | 716 | 716 | 748 |
| தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடம் கொண்ட 1ஏபீ மற்றும் 1சீ பாடசாலைகளின் விகிதாசாரம் | - | 46.8 | - | 92.7 | - | 95.9 |
| தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம் கொண்ட வகை 2 மற்றும் வகை 3 பாடசாலை எண்ணிக்கை | - | 21.8 | - | 36.1 | - | 43.0 |
| குடிநீர் வசதிகள் கொண்ட பாடசாலைகளின் விகிதாசாரம் | 73 | - | - | 83 | - | 85 |
| போதியளவு சுத்திகரிப்பு வசதிகளை கொண்ட பாடசாலைகளின் விகிதாசாரம் | 21 | - | - | 51 | - | 79 |
| **நிதி** (s) | | | | | | |
| கல்வி அமைச்சினால் பொது கல்விக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் (ரூ . மி) | | 23,000 | 28,237 | 26,418 | 29,180 | 31,295 |
| மீண்டெழும் (ரூ . மி) | | 19,562 | 23,670 | 22,373 | 24,932 | 26,926 |
| மூலதனம் (ரூ . மி) | | 3,438 | 4,267 | 4,045 | 4,248 | 4,369 |
| கல்வி அமைச்சினால் மற்றும் மாகாண சபையினால் பொது கல்விக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் (ரூ . மி) | 52,347 | 84,783 | 90,826 | 96,633 | 107,164 | 116,704 |
| மீண்டெழும் (ரூ . மி) | 44,839 | 78,288 | 84,316 | 89,816 | 99,143 | 107,519 |
| மூலதனம் (ரூ . மி) | 7,508 | 6,495 | 6,510 | 6,817 | 8,021 | 9,185 |
| பாடசாலை பாடநூல் வழங்குவதற்கான செலவினம் | | 3,387 | 2,196 | 1,941 | 2,294 | 2,055 |
| பாடசாலை சீருடை வழங்குவதற்கான செலவினம் | | 582 | 1,260 | 949 | 1,364 | 2,218 |
| **பாடசாலை போசாக்கு வேலைத்திட்டம்** | | 1,649 | 2,251 | 2,275 | 2,631 | 2,790 |

(a) வருடாந்த பாடசாலை புள்ளிவிபரங்கள் மூலம்

(b) 1AB : 1 தொடக்கம் 13 அல்லது 6 தொடக்கம் 13 தரம் கொண்ட க.பொ.த (உ.த) விஞ்ஞானம்,வர்த்தகம்,கலை பாடவிதானம் கொண்ட பாடசாலைகள்.

1C : 1 தொடக்கம் 13 அல்லது 6 தொடக்கம் 13 தரம் கொண்ட க.பொ.த (உ.த) வர்த்தகம் மற்றும் கலை பாடவிதானம் ஆகிய 2 அல்லது 1 கொண்ட பாடசாலைகள்.

வகை 2 : 1 தொடக்கம் 11 அல்லது 6 தொடக்கம் 11 தரம் கொண்ட க.பொ.த (சா.த) வரையான பாடசாலைகள்.

வகை 3 : 1 தொடக்கம் 8 ஆம் தரம் வரையுள்ள ஆரம்ப அல்லது கனிஷ்ட பாடசாலைகள்.

(c) நகர - மாநாகர சபை அல்லது நகர சபை அதிகார பிரதேசத்திலுள்ள பாடசாலை

கிராமிய - பிரதேச சபை அதிகார பிரதேசத்திலுள்ள பாடசாலைகள்

(d) நிதி அறவிடப்படும் அல்லது அறவிடப்படாத தேசிய பாடவிதானத்தை கற்பிக்கும் தனியார் பிரிவினை நிர்வகிக்கும் பாடசாலை (இதில் சர்வதேச பாட சாலைகள் அடங்குவதில்லை)

(e) விஷேட தேவைகள் கொண்ட பிள்ளைகள் (கற்புலன்,செவிபுலன், ஒட்சம்) இற்கான விஷேட பாடசாலைகள்

(f) பட்டபின் பட்ட டிப்ளோமா கொண்ட பட்டதாரிகள் தேசிய கல்விக் கல்லூரிகளினால் அல்லது ஆசிரிய கல்லூரிகள் மூலம் பயிற்சி பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள்

(g) தேசிய கல்விக் கல்லூரி மூலம் அல்லது ஆசிரிய கல்லூரி மூலம் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள்

(h) தொழில் தகமை கொண்ட பட்டதாரி மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை, மொத்த ஆசிரியர் எண்ணிக்கை விகிதாசாரம்

(i) விஷேட பாடசாலை உட்பட

(j) வருடாந்த பாடசாலை எண்ணிக்கை புள்ளிவிபரங்கள் மற்றும் புள்ளிவிபர திணைக்கள சனத்தொகை புள்ளிபரம்பல் ஊடாக

(k) 5 வருடங்களை பூர்த்தி செய்த சனத்தொகையில் அரச பாடசாலை, தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்களில் 1ஆம் தரத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் விகிதாசாரம்

(l) 5 - 10 வயதெல்லைக்கு உட்பட்ட சனத்தொகையில் அரச பாடசாலை, தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்களில் ஆரம்ப கல்வி சுற்றுக்கு உள்ளடக்கப்பட்ட விகிதாசாரம்

(m) 5 - 14 வயதெல்லைக்கு உட்பட்ட சனத்தொகையில் அரச பாடசாலை, தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்களில் ஆரம்ப தொடக்கம் கனிஷ்ட இடைநிலை மட்டம் வரை (1 - 9 தரங்களுக்கு) சேர்த்துக்கொள்ளப்படுள்ள மாணவர் விகிதாசாரம்

(n) 5-16 கட்டாய கல்வி வயதெல்லைக்குள்ள சனத்தொகையில் அரச பாடசாலை, தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்களில் ஆரம்ப தொடக்கம் சிரேஷ்ட 1ம் கட்டம் வரை (1-11 தரங்களுக்கு) சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் விகிதாசாரம்

(o) அரச பாடசாலைகளுக்கு 1ம் தரத்துக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களில் 9ஆம் தரம் வரை தங்கியுள்ளோரின் விகிதாசாரம்

(p) இலங்கை பரீட்சை திணைக்கள பெறுபேறு புள்ளிவிபரங்கள் ஊடாக.

(q) பாடசாலைகளில் காணப்படும் உட்கட்டமைப்ப வசதிகளில் பிரதான வகைகளில் மாத்திரம் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

(r) பாடசாலைகளின் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தரங்களுக்கு அமைவாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(s) கல்வி அமைச்சின் புள்ளிவிபரவியல் மற்றும் நிதியமைச்சின் வருடாந்த அறிக்கை புள்ளிவிரங்களுக்கு அமைய

(t) கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சகல அரச பாடசாலைகளில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒரு சில பாடசாலைகளிலும் 2009.06.01 பாடசாலை புள்ளிவிபரவியல் தினமன்று மூடப்பட்டு இருந்தன.

(u) முதலில் க.பொ.த(உ.த) பரீட்சைக்கு தோற்றிய பரீட்சாத்திகளின் பெறுபேறுகளுக்கு அமைய

(v) 1ம் தடவை மற்றும் 2ம் தடவை பரீட்சைக்கு தோற்றிய பரீட்சாத்திகளின் பெறுபேறுகளுக்கு அமைய

(w) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் கொண்ட ஆங்கில மொழி மூலம் பாடங்களை தொடரும் மாணவர்கள்.

# அத்தியாயம் - 1-9

# 1. கல்வி அமைச்சின் செயற்பாட்டு பொறுப்புக்கள்

**நோக்கு**

இலங்கையின் அடையாளத்தின் பங்காளர்களான திறமைமிக்க பிரஜைகள் ஊடாக கோளமய சமூகத்தின் அதி உன்னத நிலைமைக்கு எட்டுதல்.

**பணிக்கூற்று**

அறிவு, பண்பு, பலம் மிக்க பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் தாயகத்தை நேசிக்கும் கோளமயத்துக்கு வளமிக்க சிறந்த திறமைமிக்க ஆக்க வியலாளர்களை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் மானிட வளத்தை விருத்தி செய்தல்.

## 1.1 கல்வி அமைச்சின் பொறுப்புக்கள்

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்க கொள்கை கோட்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு மாற்றமடைந்து செல்லும் உலகிற்கு பொருத்தமுள்ள கல்வி கட்டமைப்பு உற்பத்தி திறனை அமுல்படுத்தும் முன்னனி பொறுப்புக்கள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கல்வி துறைக்குரிய கட்டங்கள் மூலம் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகள் மற்றும் கோவைகளை அமுல்படுத்துவது தொடர்பான பொறுப்புக்கள் மத்திய அமைச்சிற்கு வழங்கப்பட்டமையினால் மாகாண கல்வி பொறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் தேசிய கல்வி கொள்கைகளை அமுல்படுத்துவது அமைச்சின் பிரதான பொறுப்பாகும். கல்வியின் தரத்தை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகும். இருக்க வேண்டிய மானிட மற்றும் பௌதீக வளத்தினை போதியளவு வழங்குதல் மற்றும் பிரிவெனா மேற்பார்வை செயற்பாடுகளை அமுல்படுத்துவது கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும்.

பாடசாலை பாடவிதானம், பாடநூல், மேற்பார்வைகள் மற்றும் மதிப்பீடுகள் போன்ற கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக ஏனைய பின்னூட்டல்களை மேற்கொள்ளல் மற்றும் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தி முன்னெடுப்பதும் கல்வி அமைச்சின் பொறுப்புக்களில் அடங்குகின்றன.

## 1.2 கல்வி அமைச்சின் செயற்பாட்டுப் பணிகள்

- தேசிய கல்விக் கொள்கையினை வகுத்தல் மற்றும் நவீன மயப்படுத்துவது தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகள் உட்பட மீளூட்டல்களை வழங்கி கல்வியின் விரிவான நோக்கங்களுக்கு அமைய தேசிய கல்விக் கொள்கையின் வரைவிலக்கணம் மற்றும் பயன்பாடுகள்.
- தேசிய நோக்கங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க கல்வியின் செயற்பாட்டுத் திட்டமிடல்கள், அமுல்படுத்தல், மேற்பார்வை, முன்னேற்றங்கள், மீளாய்வுகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- கல்வி அபிவிருத்திக்காக இருதரப்பு மற்றும் பல்தரப்பு வெளிநாட்டு உறவினைப் பேணல், வலய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடனான ஒத்துழைப்புக்களையும் பேணல்.
- பொதுக் கல்வியின் தரத்தினைத் தீர்மானித்தல் மற்றும் அந்தரங்கங்களினைப் பேணுவதற்காகத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுத்தலும், பாடசாலை மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை விருத்திசெய்தலும்.
- பொதுக் கல்வி, ஆசிரிய கல்வி, விசேட கல்வி மற்றும் பிரிவெனாக் கல்விக்குரிய பாடவிதான விருத்தியினை அமுல்படுத்தல் மற்றும் மதிப்பிடுகள்.
- கல்வி விருத்திக்காக ஆராய்ச்சித் துறையினை இனங்கண்டு ஆராய்ச்சிகளை நடாத்தல் மற்றும் அதன் பெறுபேறுகளை கல்விச் செயற்பாடுகளுக்காக பயன்மிக்கதாக மாற்றியமைத்தல்.
- தேசிய மட்டத்திலான சான்றிதழ் பரீட்சை, பாடப் பரீட்சை மற்றும் பொது விவேகப் பரீட்சைகளுக்காக பொருத்தமான மதிப்பீட்டு
- முறைகளை முன்னெடுத்தலும் மீளாய்வுக்கு உட்படுத்தலும்.
- பலம்பொருந்திய கல்விப் பண்புசார் செயற்பாடுகளுக்குத் தேவையான மனிதவள விருத்தி.
- கல்வி அமைச்சின் கீழுள்ள ஆசிய கல்வி நிறுவனங்கள் மற்றும் தேசிய பாடசாலை-லகளின் முகாமைத்துவமும் செயற்சாதனை மதிப்பீடுகளும்.
- கல்வி முகாமைத்துவம் மற்றும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக மாகாணக் கல்விப் பொறுப்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல், இணைப்புக்கள் மற்றும் மீளாய்வுகள்.
- வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வைகள்.
- கற்றல் உதவிக் கல்விக் கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான மதிப்பீடுகள் உட்பட தரத்தினை உறுதிப்படுத்தலும், திட்டமிடல் அபிவிருத்திகளும்.
- பாடநூல், சீருடைத் துணிகள் மற்றும் தேசிய மட்டத்தில் வழங்க வேண்டிய சேவைகள் உட்பட பொருட்களை வழங்குதல்.
- கல்வி விடயத்துறையின் கீழ் சகல மூலதனச் செலவினங்களும் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மீண்டெழும் செலவினங்களையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தலும், நிதி ஒதுக்கீடுகளை கிரமமாக நிதி முகாமைத்துவ முறைமையில் அமுல்படுத்தல்.
- கல்வித்துறையின் கீழுள்ள சகல சேவைகளினதும் பிராமணக் குறிப்பினை நிர்வகித்தல்.
- கல்வி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிறந்த உள்ளக நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

## 1.3 கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள்

- மாகாணக் கல்வித் திணைக்களம்
- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- இலங்கை பரீட்சைத் திணைக்களம்
- தேசிய கல்வி நிறுவகம்
- இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை

# 2. மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு அரச கொள்கை கோட்பாடு மற்றும் தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு

## 2.1 விரிவான நோக்கு கொண்ட கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள்

"மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு 2010" வியூக அபிவிருத்தி பிரவேசத்துக்கு அமைய அறிவினை கேந்திரமாக கொண்டமைந்த இலங்கையை மாற்றியமைக்கும் நோக்குடன் கல்வி கொள்கை மற்றும் அதனுடன் இணைந்த 12 அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவ் இலக்கினை 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டில் பாரிய செயற்பாட்டு பணிகளை மேற்கொள்ள கல்வி அமைச்சுக்கு முடிந்துள்ளது.

### தேசிய கல்வி அபிவிருத்தி இலக்கு

1. கட்டாயக் கல்வி வயதில் உள்ள சகல பிள்ளைகளுக்காகவும் கல்விப் பிரவேசத்திற்கான சந்தர்ப்பத்தினை உறுதி செய்தல் மற்றும் க.பொ.த. (சா.த.) வரையான பங்கேற்பினை 85% தொடக்கம் 90% வரை அதிகரித்தல்.
2. மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் சிறுவர் நட்புறவுப் பிரவேசம் கொண்ட 6500 ஆரம்பப் பாடசாலைகளை மீள்கட்டியமைத்தல்.
3. க.பொ.த. (சா.த.) சித்தியடைந்த விகிதாசாரத்தை 61% தொடக்கம் 75% வரை அதிகரித்தல்.
4. க.பொ.த. (உ.த.) சித்தியடைந்த விகிதாசாரம் விஞ்ஞாபனப் பாடவிதானம் 50% தொடக்கம் 53% வரை, வர்த்தகப் பாடவிதானம் 51% தொடக்கம் 60% வரை, கலைப் பாடவிதானம் 59% தொடக்கம் 63% வரை அதிகரித்தல்.
5. க.பொ.த. (உ.த.) பங்கேற்பு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பாடவிதானத்தை 21% தொடக்கம் 40% வரை, வர்த்தகப் பாடவிதானம் 27% தொடக்கம் 35% வரையும், கலைப் பாடவிதானங்களில் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தல்.
6. தொழில்சார் தகைமை கொண்ட ஆசிரியர் விகிதாசாரத்தை 81% தொடக்கம் 90% வரை அதிகரித்தல்.
7. மாணவர் தகவல் தொழில்நுட்ப அறிவினை 35% தொடக்கம் 70% வரை, தகவல் தொழில்நுட்பத் திறமை கொண்ட ஆசிரியர் எண்ணிக்கையினை 30% தொடக்கம் 70% வரை அதிகரித்தல்.
8. க.பொ.த. (சா.த.) மற்றும் (உ.த.) தொடர்ந்து பாடசாலையை விட்டு விலகிய 100,000 தொடக்கம் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) இற்கான அடிப்படையினைப் பாடசாலை மட்டத்தில் வழங்குதல்.
9. சமூக நல்லினகத்தை கௌரவிக்கும் ஆசிரிய மாணவர்களை உருவாக்குவதனை அடிப்படையாகக் கொண்டு 9931 பாடசாலைகளில் மும்மொழிக் கற்கைக்கான சந்தர்ப்பத்தினை உறுதிப்படுத்தல்.
10. உயர் ஆளுமை மற்றும் உடற் தகைமை கொண்ட மாணவர்களை உருவாக்கும் நோக்குடன் சகல பாடசாலைகளிலும் விளையாட்டுக்கான வசதிகளை வழங்குதல்
11. அழகியல் மற்றும் பாட அமைதியான செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல்.
12. சகல கல்வி நிறுவனங்களிலும் அதி சிறந்த சேவைகளை வழங்குவது தொடர்பாக தேசிய உற்பத்தித் திறன் தரத்தினை வழங்கும் நிறுவனமாக மாற்றியமைத்தல்.

## 2.2 கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்கள் 2013 - 2017

2012 - 2016 வரையான " அறிவு சார் பொருளாதாரத்துக்கான மானிட மூலாதாரத்தை அடிப்படையாக கொண்ட பாடசாலை முறை மையினை மாற்றியமைத்தல். நோக்காக கொண்ட கல்வி துறைசார் அபிவிருத்தி கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்களில் நீடிப்பாக 2013-2017 கால எல்லைக்கான திட்டமிடல் செயற்பாடு - களுக்கு அமைய தேசிய கல்வி திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன." முதலாவது கல்வி" என வெளியிடப்பட்டுள்ள இத்தேசிய வியூக திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 3 தொனிப்பொருளை அடிப்படையாக கொண்டு வகுப்பட்டுள்ளன.

**தொனிப்பொருள் 1 : ஆரம்பம் மற்றும் இடைநிலைக் கல்விக்காக சம நியாயம் கல்வி பிரதேச சந்தர்ப்பத்தினை மேம்படுத்தல்.**

### எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு

- 11 தரம் (16 வயது வரை) மாணவர்களின் பங்கேற்கும் விகிதாசாரத்தை அதிகரித்தல்.
- 9 ஆம் தரத்திலிருந்து 10 ஆம் தரத்தில் சித்தியடைந்த மாணவர் விகிதாசாரத்தை மேம்படுத்தல்.
- சேர்த்துக்கொள்ளப்படும் தேறிய விகிதாசாரம் மற்றும் தேறிய சேர்த்துக்கொள்ளும் விகிதாசாரத்தை அதிகரித்தல்.
- மாகாணத்தினால் தீர்மானிக்கப்பட்ட இலக்குகளுக்கு அமைய பாடசாலை செல்லாத மாணவர் எண்ணிக்கை அளவினை கட்டுப்படுத்தல்.
- ஆரம்ப பாடசாலை வலையமைப்புக்காக 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 1000 இடைநிலைப் பாடசாலை மற்றும் 5000 ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்திருத்தல்.
- உயர் மட்டத்திலான கற்கை சூழலுக்காக முதலீடு மற்றும் பாதுகாப்பு பாடசாலை முறைமையினை உருவாக்குதல்.
- தேசிய ஒப்பளவுகளுக்கு அமைய அடிப்படை மற்றும் உயர் மட்டத்திலான கற்றல் வசதிகளை சகல பாடசாலைகளுக்கும் வழங்கியிருத்தல்.
- முறைசாரா கல்வி மற்றும் விஷேட கல்வி வேலைதிட்டங்களை பலமுடன் அமுல்படுத்தல்
- விஷேட கல்வி தேவைகள் கொண்ட சிறார்களுக்கு ஆரம்பம் மற்றும் இடைநிலை கல்விக்காக சம சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- பிரிவெனாக்களுக்காக அடிப்படை வசதிகளை வழங்குதல்.
- சகல பாடசாலை பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு மிகுந்த பாடசாலையாகன உறுதிப்படுத்தல்.
- பாடங்களில் உடல்சார் தண்டனைகளில் வழங்கும் முறைகளை ஒழிக்கப்பட்டிருத்தல்.
- அனர்த்தம் மற்றும் அபாய முகாமைத்துவத்தை பலப்படுத்தல்.
- பாடசாலை பாடநூல்,பாடசாலை சீருடை தேவை கொணட்ட மாணவர்களுக்காக மதியஉ உணவு மற்றும் பலமை பரிசில் உதவிகளை அடிப்படையாக கொண்ட கோரிக்கை நடைமுறை பணிகளை முன்னெடுத்தல் மற்றும் உரிய பயன்களை பெற்றுக்கொடுத்தல்.
- சகல பாடசாலைக்குரியவாறு பாடசாலை சுகாதார வேலைத்திட்ட.த்தை அபிவிருத்தி செய்தல்

**தொனிப்பொருள் 2 : ஆரம்பம் மற்றும் இடைநிலை கல்வியின் பண்புசார் தரத்தை மேம்படுத்தல்.**

### எதிர்பார்க்கப்பட்ட பெருபேறுகள்

- வேலை உலகில் கேள்விகளுக்கு ஏற்றவாறு மற்றும் தேர்ச்சியினை பெற்றுக்கொள்வதனை உறுதிசெய்யும் வகையில் தேசிய பாடவிதானம் மறுசீரமைப்பு மற்றும் சமகாலப்படுத்தல் .
- முதல் மொழி கல்வி பெறுவது உறுதிப்படுத்தல்.
- மாணவர்களின் இயலுமைக.்.ளக்கு அமைய கணிதம் மற்றும் விஞ்ஞான பாடத்தை பல்வகைப்படுத்தல்.
- ,ரட்டை மொழி கல்விக்காக பாட உள்ளடக்கம் மற்றும் மொழி இணைப்பு கோட்பாடுகளை தாபித்தல்.
- சகல இடைநிலை பாடசாலைகளிலும் குறைந்த பட்சம் 3 விளைபாடங்களிலேனும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தல்.
- நிறுவன ஆசிரிய அபிவிரத்தி கோட்பாட்டினை கல்வி முறைமையில் தாபித்தல்.
- க.பொ.த (சா.த இன் கீழ்) கணிதம்,விஞ்ஞானம்,ஆங்கிலம் மற்றும் தாய்மொழி (சிங்களம்,தமிழ்) பாடங்களுக்காக க.பொ.த (உ.த இன் கீழ்) இரசாயணவியல், பௌதீகவியல், கணிதம் மற்றும் உயிரியலுக்காக கலை மற்றும் வர்த்தக பாடவிதான கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களுக்காகவும் வகைகளின் பகுப்பாய்வுகள் 2016 ஆம்

ஆண்டளவில் வெளியிடப்பட்டிருத்தல்.

- க.பொ.த உயர்தர பரீட்சைக்காக 2016 ஆம் ஆண்டளவில் கீழ் குறிப்பிடப்பட்ட விகிதாசாரம் மூலம் அவ் அவ் பாடவிதானத்தின் கீழ் மாணவர்கள் தேற்றுதல்.
- 2010 ஆண்டு அளவில் 22.5% விஞ்ஞான பாடவிதானத்தை தேற்றும் மாணவர் எண்ணிக்ரகை 2016 ஆம் ஆண்டளவில் 40% அதிகரித்துள்ளது..
- இதுவரையில் 25.2% மாக இருந்த வர்த்தக பாடவிதானத்தின் கீழ் தேற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டளவில் 35% அதிகரித்திருத்தல்.
- 2010 ஆம் ஆண்டளவில் 52.3% கலை பாடத்தின் கீழ் தோற்றும் மாணவர் எண்ணிக்கை 2016 ஆண்டளவில் 25% பேணல்.
- ஆரம்பம் மற்றும் இடைநிலை தரங்களின் மாணவர்களின் அடைவு மட்டத்தினை அளவீடு செய்யக்கூடியவாறு தேசிய மதிப்பீடு அமுல்படுத்தல்.
- குறைந்த அடைவு மட்டம் கொண்ட மாணவர்களின் கற்றல் தேவைகளுக்கு ஏற்றவாறு விஷேட கற்றல் முறையினை அமுல்படுத்தல் மற்றும் அதற்குரிய வசதிகளை வழங்கியிருத்தல்.
- பாடசாலை பாடநூல் பண்புசார் தரத்தை மேம்படுத்துவதற்கு மேற்பார்வை குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் உரிய பாடநூல் 100% பொருத்தமாக இருத்தல் விஷேடமாக மொழி, வரலாறு, ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களின் பண்புசார் தரத்தை மேம்படுத்தல்.
- பாடசாலைகளில் தேசிய சமூக நல்லினக்க வேலைத்திட்டங்களை ஊக்குவித்தல்.
- தொழில்சார் வழிக்காட்டல் மற்றும் ஆலோசனை வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தர மற்றும் தரநிர்ணய வேலைைத்திட்டங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்தலும் சமகாலப்படுத்தி சகல மாணவர்களிலும் இவ்வேலை திட்டத்தை அமுல்படுத்தல்.

**தொனிப்பொருள் 3 : கல்வியின் சிறந்த நிருவாகம் மற்றும் சேவை வளங்களை பலப்படுத்தல்.**

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்**

- பாடசாலைகளை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு மற்றும் பாடசாலை அபிவிருத்தி திட்டமிடல்,திட்டங்களை சமகாலப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை தொடர்ந்தும் அமுல்படுத்தல்.
- பாடசாலை அபிவிருத்திக்காக பாடசாலை அபிவிருத்தி சங்கம், பாடசாலை அபிவிருத்தி குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவ குழுவினை விருத்தி செய்தல், தாபித்தலும் அதற்குரிய பயிற்சி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பாடசாலைகளுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வழங்கியிருத்தல்.
- சகல ஆரம்ப பாடசாலைகளிலும் சிறுவர் நட்புறவு பிரவேசங்களை பலப்படுத்தியிருத்தல்.
- தொழில்சார் அனுபவம் கொண்ட ஆசிரிய கல்வியலாளர்களின் சேவை முறைமை காணப்படல்.
- தொழில்சார் அனுபவம் மற்றும் திறமைகள் கொண்ட அதிபர்களை சேவையில் ஈடுபடுத்தல்.
- தொழில்சார் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பங்கேற்கும் அதிபர்களின் எண்ணிக்கை கூடுதலாக காணப்படல்.
- வலய கல்வி அலுவலகம், முகாமைத்துவம், நிர்வாக பிரிவாகவும், கோட்டக்கல்வி அலுவலகம், கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பிரிவாக பலமுடன் அமுல்படுத்தல்..

**அடிப்படை தொனிப்பொருள் : கல்வி துறைசார் அபிவிருத்தி திட்டங்கள்**

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்**

- தகவல் மற்றும் புள்ளிவிபரங்களை கொண்ட கல்வி கொள்கை மற்றும் திட்டமிடல் கலாச்சாரத்தை தாபித்தல்.
- கல்வி துறைசார் வியூக மற்றும் வருடாந்த அமுல்படுத்தும் திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் சமகாலப்படுத்தல்.
- மாணவர்களின் கற்றல் அடைவு மதிப்பீடு செய்யக்கூடிய தேசிய மதிப்பீட்டு முறை, ஆரம்ப சிறுபராயம் (4ம் தரம் தாய்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக) மற்றும் இடைநிலை பராயம் (8ஆம் தரம் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம்) அதன் மூலம் வெளிவரக்கூடிய தகவல் வியூக திட்டங்கள் மற்றும் வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்களுக்கு அமுல்படுத்தல்.
- கல்வி மீண்டெழும் வரவு செலவு உயர்மட்டத்தை கற்கை செயற்பாட்டிற்காக 2011 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 3.2% ஒதுக்கீடு 2016 ஆம் ஆண்டளவில் 4.2% வரை அதிகரித்தல் .
- கல்வி மூலதன வரவு செலவு திட்டத்தின் மூ லம் உயர்மட்டத்திலான கற்றல் சந்தர்பங்களில் மற்றும் மூலதன உள்ளீடுகளுக்காக 2011 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 42% ஒதுக்கீடு 2016 ஆம் ஆண்டளவில் 42.8% வரை அதிகரித்துள்ளது..
- கல்வி வரவு செலவு திட்டத்தின் மூலம் உயர்மட்டத்திலான கற்கைக்கான சந்தர்ப்பம் மற்றும் மூலதன உள்ளீட்டு பராமரிப்பு மற்றும்

நவீனமயப்படுத்தலுக்காக 2011 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 15% ஒதுக்கீடு 2016 ஆம் ஆண்டளவில் 17% வரை அதிகரித்திருத்தல்.

- கல்வி திட்டமிடல் கலாச்சாரத்தை இலங்கை கல்வி முறைமையில் பலமுடன் அமுல்படுத்தல்.
- பாடசாலை கல்வி மற்றும் தொழில்நுட்பம் உட்பட தொழில்சார் உயர்கல்வி துறைக்கிடையிலான சிறந்த துறைசார் இணைப்புக்களை தாபித்தல்.

பெறுபேறுகளை அடிப்படையாக கொண்ட மேற்பார்வை மற்றும் மதீப்பீட்டு கோட்பாடுகளை பலமுடன் அமுல்படுத்தல்

முழுமையாக இவ் இடைகால அபிவிருத்தி இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி அடிப்படையாக கொண்டு அமுல்படுத்தப்படுகின்றன. பிரதேச ரீதியில் திறமைமிக்க சமூகத்தை உருவாக்குவதற்காக சமூக பொருளாதார விரிசல்களை தீர்ப்பதற்கு இது பங்களிப்பு செய்கின்றது அத்துடன் இலங்கையின் வறுமையினை நீக்குவதற்கும் உதவுவதற்கும் நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற வகையில் இலங்கையின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்த உதவும் இவ்வேலைத்திட்டத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும்.

## 2.3 புதிய கல்வி கொள்கைகளை அமுல்படுத்தல்.

### 2.3.1 புதிய கல்வி கொள்கைகள் மற்றும் யோசனை தொடர்களுடன் இணைந்த கல்வி திட்டம்

இலங்கையில் பொது கல்விக்கான புதிய கல்வி கொள்கை மற்றும் யோசனைகள் கல்வி செயற்பாடுகள் தொடர்பான விஷேட பாராளுமன்ற ஆலோசனை செயற்குழு சபையின் அங்கிகாரம் பெற்று அமைச்சரவையில் சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



புதிய கொள்கைகள் மற்றும் யோசனைகளை மீளாய்வுக்கு உட்படுத்தி பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை உபகுழு மற்றும் அமைச்சின் செயலாளர்களின் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

### 2.3.2 கட்டாய கல்வி வயதெல்லை 16 வயது வரை நீடித்தல்.

இதுவரையில் கட்டாய கல்வி வயதெல்லையாக 5-14 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 5-16 வயது வரை நீடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கல்விக்கான சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் எடுக்கப்பட்ட மிக முக்கிய நடவடிக்கையாக இதனை கருதமுடிகிறது.

குறைந்த பட்சம் க.பொ.த (சா.த வரை எனும்) பாடசாலைகளில் மாணவர்களை நிலைப்படுத்துவதை போன்று சிறுவர் பிள்ளைகள் வேலையில் ஈடுப்படுத்துவதை தடுப்பதும் இதன் நோக்காகும்.

## 2.4 அபிவிருத்தி இலக்கினை நிறைவேற்றுவதற்காக அரச தலைவர்களின் வழிக்காட்டல்கள்

மஹிந்த சிந்தனை எதிர்கால அபிவிருத்தி பிரவேசத்திற்கு அமைவாக கல்வி அமைச்சினால் எட்டுவதற்கு கடப்பாடு கொண்ட தேசிய இலக்கினை நோக்கி முழு சமூ கத்தையும் திசைதிருப்புவதற்கான செயற்பாடுகள் குறித்த முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி 2013 பெப்ரவரி 18ம் திகதி இசுருபாய கல்வி அமைச்சிற்கு வருகை தந்து உத்தியோகத்தர்களை சந்தித்தார்.

இதன் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அதற்குரியதாக அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டள்ள நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- சகல சர்வதேச பாடசாலைகளிலும் தாய்மொழி, சமயம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள் பாடவிதானத்தில் உள்ளடக்கி கற்பிக்க கட்டாயப்படுத்துவதற்காக வெளிப்பாட்டு மேற்பார்வை பணிகளை மேற்கொள்ள தொடர்ச்சியான வேலைத்திட்டங்களை வகுத்தல்.
- சர்வதேச மற்றும் தனியார் பாடசாலை-களை முறைப்படுத்துவதற்கு பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள குழு நியமிக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரை கொண்ட அறிக்கை அமைச்சரவையினால் சமர்பிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச பாடசாலைகளில் தாய்மொழி, சமயம் மற்றும் வரலாறு கற்பிக்க கட்டாயமாக்குவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்பிக்கப்பட்டுள்ளது..

- ♦ பாடசாலைகளில் சகல தரங்களிலும் பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளும் முழுமையான பொறுப்பு உரிய கல்லூரியின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிப்பதன் புதிய முறைகளுக்கு முறையான அங்கிகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் துரித கதியில் அதிகரித்துள்ளது.

  - அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்பிக்கப்பட்டுள்ளது.
  - ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை அறிமுகப்படுத்துவதற்காக தேவையான பின்னியினை தயாரிக்கும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தின் வழிக்காட்டலுடன் தேசிய கல்வி ஆணைக்குழு சபையுடன் இணங்கி துரிதமாக அமுல்படுத்தல்.
  - சகல மாகாணங்களிலும் ஆரம்ப பாடசாலைகளை மேற்பார்வை செய்து ஆசிரியர்களின் மற்றும் பெற்றோரின் கருத்துக்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஆரம்ப சிறுபராய அபிவிரத்தி தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து கொள்கையினை வகுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
  - முறைசார்ந்த ரீதியில் நிதி சேகரிப்பதை தவிர்க்கும் வகையில் 2013/11 கொண்ட 2013.03.31 ஆம் திகதி சுற்றறிக்கை வெளியடப்பட்டுள்ளது.

- ♦ பாடசாலை சொத்துக்களை ஆவணப்படுத்தல் மற்றும் கற்புலனாகும் கணக்கு செயற்பாடுகளை தாபித்தல்..

  - பாடசாலைகளை அடிப்படையாக கொண்டு பன்புசார் மற்றும் அளவீடு உட்பட கட்டமைக்கப்பட்ட அபிவிருத்திக்கான திட்டமிடல்கள் மற்றும் பெறுகை ஆகிய புதிய சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனை கோவை தயாரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை ஆவணப்படுத்தவது தொடர்பான சகல சொத்துக்களும் இதில் உள்ளடக்கபடுகின்றன.
  - பாடசாலை அபிவிருத்தி செயற்பாடுகளை பாடசாலை சிறார்களிடமிருந்து முறையற்ற ரீதியில் நிதி சேகரிப்பிற்குரியதான மகாண சபைகளுடன் கலந்துரையாடி புதிய சுற்றறிக்கைகளை வெளியிடல்.





- ♦ பாடசாலை பிள்ளைகளின் உடல் உள நிலைமைகள் மற்றும் ஆளுமையை விருத்தி செய்யும் வகையில் பாடங்களுக்கு மேலதிக விளையாட்டு பாடம், பாடவிதானம் உள்ளடக்கப்பட்டு அப்பாடத்திற்காக புள்ளி வழங்கும் முறைகளை தயாரித்தல்

  - சகல பிள்ளைகளுக்கும் விளையாட்டினை கட்டாயப்படுத்துவதற்காக கல்வி, உயர் கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சுடன் இணைந்த வேலைத்திட்டத்தை தயாரித்து அமைச்சரவை அங்கிகாரம் பெற்றுள்ள பாடசாலை மட்டத்தில் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ♦ பாடசாலை அபிவிருத்தி செயற்பாடு மேற்பார்வைகள் மற்றும் வழிகாட்டல்களை பிரதேச செயலகம், பல்கலைகழக விரிவுரையாளர்கள் மற்றும் சமூகத்திற்கு வரவேற்றதக்க புத்திஜீவிகள் பொறியியலாளர்கள் மற்றும் சமய தலைவர்களின் தலைமையுடனும் பிரதிநிதித்துவத்துடனும் ஆலோசனை குழு நியமித்தல் மற்றும் அம்முறைகள் முதல் 1000 பாடசாலை வேலைத்திட்டத்துடன் அமுல்படுத்தல்.

  - ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பாடசாலைகளில் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன..

# 3. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் சம நியாயப் பிரவேசம் மற்றும் பங்கேற்பினை உறுதிப்படுத்தல்

## 3.1 மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகளை மீள்கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டம்.

### 3.1.1 மஹிந்தோதய 1000 இடைநிலை பாடசாலைகளை மீள் கட்டியெழுப்புவதன் நோக்கம்.

2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகளை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- ஒரு சில ஆரம்ப பாடசாலைகள் மூலம் போதிக்கப்படும் 1000 இடைநிலைப் பாட சாலைகளில் மூலம் கல்வியின் முக்கியத்துவ கட்டமைப்பு மற்றும் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தல்..
- இடைநிலைப் பாடசாலைகளுக்கு தேவையான பௌதீக மற்றும் மானிட வளத்தை வழங்குவதன் மூலம் சகல வசதிகளும் கொண்ட பாடசாலையாக மாற்றியமைத்தல்.
- ஆரம்ப பாடசாலைகளுடன் இணைந்துள்ள அபிவிருத்தி விழுமியங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் திட்டமிடல்.
- சிறந்த கல்வி மத்திய நிலையமாக மாற்றியமைக்க மானிட பண்புகள் கொண்ட பிரஜைகளை உருவாக்குதல்..
- நகரங்களில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையினை குறைத்தல்.
- நாட்டின் சகல பிரதேசங்களில் கல்விக்காக சம நியாயத்தினை உறுதிப்படுத்தல்.
- உயர்தர விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் கற்கும் மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- சகல பிரதேச செயலக பிரிவுகளில் குறைந்த பட்சம் 1 A,B 3 பாடங்களையேனும் மீள் கட்டியெழுப்புதல்.
- சகல பிரதேச பிரிவுகளிலும் குறைந்த பட்சம் ஒரு பாடசாலையை மஹிந்தோதய தொழில்நுட்ப பீடமாக ஆரம்பித்தல் மற்றும் அதன்மூலம் 2013 ஆம் அண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உயர்தர தொழில்நுட்ப பாட விதானத்திற்காக மாணவர்களை ஈடுபடுத்தல்.
- விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், வர்த்தகம், கலை, அழகியல் போன்ற துறைகளில் உயர்அறிவு கொண்ட மாணவர்களை தொழிற் சந்தைக்கு அனுப்புதல்.
- தகவல் தொழில்நுட்ப கல்வி மற்றும் மொழி இயலுமைகளை விருத்தி செய்யும் மட்டம் வரை விரிவாக்குதல்.
- இடைநிலை பாடசாலைகளை சூழ கவர்ச்சிமிக்க சிறுவர் நட்புறவு ஆரம்ப பாடசாலைகளை நிர்மானித்தல்.

### 3.1.2 மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடத்தை அடிப்படையாக கொண்ட உயர் கற்றலுக்கான சந்தர்ப்பத்தை வகுத்தல்.

சுமார் 60 மில்லியன் செலவில் மஹிந்தோதய 1000 பாடசாலைகளிலும் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன் இதில் 41 கணனிகள் காணப்படுவதுடன் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம்,கணித உபகரணங்கள் கொண்ட ஆய்வுகூடங்கள், 20 கணனிகள் மற்றும் மொழி கற்பதற்காக பயன்படுத்தப்படும் வருடாந்த செயற்பொருள் உட்பட அது சார்ந்த உபகரணங்கள் கொண்ட மொழியியல் ஆய்வுகூடம் மற்றும் தொலைக்கல்வி வசதிகள் கொண்ட நனச பிரிவு உள்ளடக்கியுள்ளது.

அத்துடன் சகல மஹிந்தோதய இடைநிலைப் பாடசாலைகளுக்காகவும் உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் உபகரணங்கள் மற்றும் இரசாயண பொருட்கள் வழங்கப்பட்டதுடன் இதுவரையில் உயர்தர விஞ்ஞான பாடவிதானம் காணப்படாத பாடசாலைகளுக்கான உயர்தர பாடவிதானத்தை ஆரம்பிப்பதற்காக உயிரியல், இரசாயனவியல், பௌதீக விஞ்ஞான ஆய்வுகூடமும் மஹிந்தோதய ஆய்வுகூடத்தில் தாபிக்கப்படவுள்ளது..

2013 ஆம் ஆண்டில் 616 பாடசாலைகளில் மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூட நிர்மான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 327 பாடசாலைகளின் மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்களின் நிர்மானிப்புக்கள் 50 சதவீதத்தை விட முன்னேற்றத்தை காண்பித்துள்ளது எஞ்சிய 58 பாடசாலைகளின் நிர்மாண பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மஹிந்தோதய 150 தொழில்நுட்ப ஆய்வுகூடங்களுக்கு உபகரணம் வழங்குவதற்கான உப கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ் உபகரணங்களை பாடசாலைகளுக்கு விநியோகிக்க மற்றும் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களில் நிலைப்படுத்தவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 22 பாடசாலைகள் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் மாணவர்களிடம் கையளிக்கும் பணிகள் 2013 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளன.

## மாணவர்களிடம் கையளிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்பங்களில் ஒரு சில ஆய்வுகூடங்கள்



அவுலேகம சங்கபோதி மகா வித்தியாலம்



கலபாஹ மகா வித்தியாலயம்



சிலாபம் G.C.N ஹெரயா மகா வித்தியாலயம்



ஹபரன மத்திய மகா வித்தியாலயம்

## மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடங்களில்



விஞ்ஞான ஆய்வுகூடம்



40 கனணிகளை கொண்ட
சகல வசதிகளுடன்கூடிய
கனணி ஆய்வுகூடம்



20 கனணிகளை கொண்ட
நவீன உபகரணங்கள் அடங்கும்
மொழியியல் ஆய்வுகூடம்



கணித ஆய்வுகூடம்



மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடம்



தொலைக் கல்வி பிரிவுகள்

**3.1.1அட்டவனை: மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாணிப்பின் முன்னேற்றம் 2012.12.31**

| மாகாணம் | ஒதுக்கப்பட்ட பாடசாலை-லகளின் எண்ணிக்கை | நிர்மானப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலை-லகளின் எண்ணிக்கை | மாணவர்களிடம் கையளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேற்கு | 134 | 63 | 05 |
| மத்தி | 153 | 66 | 02 |
| தெற்கு | 110 | 91 | 02 |
| வடக்கு | 90 | 24 | - |
| வடமத்தி | 83 | 46 | 02 |
| வடமேல் | 127 | 100 | 09 |
| சப்ரகமுவ | 113 | 79 | 01 |
| கிழக்கு | 103 | 89 | - |
| ஊவா | 88 | 58 | 01 |
| மொத்தம் | 1001 | 616 | 22 |

### 3.1.3 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் தொடர்பாக மாகாண, வலய உத்தியோகத்தர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்தல்.

1000 இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் நோக்கினை எட்டுவதற்காக மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் மிகுந்த பயன்மிக்கதாக பயன்படுத்துவது தொடர்பாக மாகாண மட்டத்தில் அறிவுறுத்தும் 3 வேலைத்திட்டங்கள், வலய மற்றும் பாடசாலை மட்டத்தில் அறிவுறுத்தும் பல வேலைத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளன.

மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகூடம் தொடர்பாக வழிகாட்டல் கோவையும் வெளியிடப்பட்டது.
இதற்கு இணைவாகசகலமஹிந்தோதய இடைநிலைப் பாடசாலைகளுக்கும் இணைப்பு உத்தியோகத்தர் ஒருவர் மாகாண கல்வித்திணைக்களத்தில் நியமிக்கப்பட்டுள்ள சகல மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் மற்றும் பிரிவு பொறுப்பு ஆசிரியர் பாடசாலை ஆசிரியர் சபையின் ஊடாக நியமித்து அவர்களுக்கு உரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.




### 3.1.4 பாடசாலையை அடிப்படையாக கொண்டு தேவையான ஆசிரியர்கள் வழங்குதல்.

விஞ்ஞானம்,கணிதம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில ஆகிய பாடங்களில் புதிய கற்றல் முறைகள் நவீன வசதிகளை அறிமுகப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக இப்பாடசாலைக்கு ஆசிரியர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் 3000 ஆசிரியர்கள் பாடசாலையை அடிப்படையாக கொண்டு சேர்த்துக்கொள்ளப்பட்ட இலக்காக மேற் கொள்ளப்பட்டுள்ளது.

**3.1.2. அட்டவனை : 2012,2013 ஆம் அண்டுகளில் பாடசாலையை**

**அடிப்படையாக கொண்டு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை**

| பாடங்கள் | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| விஞ்ஞானம் | 500 |
| கணிதம் | 500 |
| தகவல் மற்றும் தொழில்நுட்பம் | 942 |
| ஆங்கிலம் | 210 |
| மொத்தம் | 2,152 |

இவர்களில் ஒரு சில ஆசிரியர்கள் போதியளவு கடமைகளை பொறுப்பேற்காமை மற்றும் ஆங்கில பாடத்திற்கான போதியளவு பட்டதாரிகள் விண்ணப்பம் கிடைக்காமையினால் இவ் இலக்கினை நிவர்த்தி செய்ய முடியாமை, இதற்காக மீள ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள எதிர்வரும் காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

### 3.1.5 அதிபர்களுக்கு பயிற்சியளித்தல்.

1000 இடைநிலை பாடசாலை அதிபர்களின் முகாமைத்துவ திறமைகளை விருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவ் வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

### 3.1.6 பாடசாலை அபிவிருத்தி வளங்களை வழங்குதல்

1வது கட்டத்தில் மற்றும் 2வது கட்டத்தில் பாடசாலைகளுக்காக அடிப்படை வசதிகளை விருத்தி செய்வதற்காக ஒரு பாடசாலைகளுக்கு 5 இலட்சம் ரூபா வீதம் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. EKSP செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதி வழங்கல் 1000 பாடசாலைகளுக்கான விஷேட நிதியங்கள் 104 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

### 3.1.7 மொத்த முதலீடு

1000 மஹிந்தோதய விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மானித்தல் மற்றும் அச் சகல தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் கொண்ட கணனி ஆய்வுகூடம், விஞ்ஞான ஆ.கூ, மொழியியல் ஆய்வுகூடம் மற்றும் நனச தொலைக்கல்வி பிரிவிற்கு தேவையான கணனி களை வழங்குவது உட்பட நவீன உபகரணங் களை வழங்குவதற்காக மொத்தமாக 2500 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவீனம் மொத்தமாக ரூபா 4500 மில்லியன் ஆகும்.

### 3.1.8 அபிவிருத்தி முன்னேற்றங்கள்

2012-2013 ஆண்டுகளில் 1ம் கட்டத்தில் 410 இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டதனை தொடர்ந்து அப்பாடசாலையில் 24,395 ஆக அதிகரித்தல் மற்றும் 2ம் கட்டமாக மேலும் 418 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டதனை தொடர்ந்தும் முழுமையாக மாணவர் எண்ணிக்கை 39,264 இனால் அதிகரித்தமை பாரிய முன்னேற்றமாகும்.

**3.1.1.வரைப்படம் : மஹிந்தோதய இடைநிலைப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை விருத்தி**




### 3.1.9 மஹிந்தோதய 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக அறிவுசார் சமூகத்திற்கான கல்வி செயற்றிட்டத்தில் ( EKSP) பங்களிப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி பெறும் அறிவுசார் சமூகத்திற்கான கல்வி ( EKSP) செயற்திட்டத்தில் செலவினத்தின் மூலம் மஹிந்தோதய 100 இடைநிலைப் பாடசாலைகளை முழுமையாக ஆய்வுகூடம் கொண்ட கவர்ச்சிமிக்கதாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

அப்பாடசாலைகளில் அதிபர்களின் கொள்ளளவு வீதத்திற்காக விஷேட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தபட்டதுடன் பாடசாலை அபிவிருத்தி வளங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

**3.1.3 அட்டவணை : EKSP செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் பாடசாலை எண்ணிக்கை மற்றும் 2013.03.31 அன்று மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை**

| மாகாணம் | அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களிடம் கையளிக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேற்கு | 14 | 10 |
| மத்தி | 12 | 18 |
| தெற்கு | 12 | 03 |
| வடக்கு | 17 | 02 |
| வடமத்தி | 8 | 09 |
| வடமேல் | 8 | 09 |
| சப்ரகமுவ | 10 | 06 |
| கிழக்கு | 11 | 08 |
| ஊவா | 8 | 06 |
| **மொத்தம்** | **100** | **71** |

- 2013 ஆம் ஆண்டில் 100 பாடசாலைகளில் 17 பாடசாலை நிர்மான பணிகள் பூர்த்தி செய்து மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஏற்கனவே மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ள மொத்த பாடசாலைகள் எண்ணிக்கை 71 ஆகும்.
- 1400 இடைநிலை பாடசாலைகளுக்காக பாடசாலை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதி வழங்கல் (SDMG) வழங்கும் இலக்குக்கு அமைய 854 பாடசாலைகளுக்கு நிதி வழங்கல்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.
- 100 பாடசாலைகளில் சுத்திகரிப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு நிர்மாண பணிகள் கையளிக்கப்பட்டன.

### 3.2.1 வரைபு : 100 இடைநிலைப் பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறு முன்னேற்றங்கள்






`ரன்கல மகா வித்தியாலயம்

அன்று இன்று





பதவி பலுகஸ்வங்குவ மகா வித்தியாலயம்

அன்று இன்று





விஜேரிய சுமன மகா வித்தியாலயம்

அன்று இன்று





ஸ்ரீ வலகம்பா மகா வித்தியாலயம்

அன்று இன்று



## 3.2 ஆரம்ப பாடசாலை வலையமைப்பு சிறுவர் நட்புறவு பிரவேசத்திற்கமைய அபிவிருத்திகள்




ஆரம்ப பாடசாலைகள் பிள்ளைகள் எதிர்காலத்தை முடிவுசெய்யும் தீர்க்க மான இடம் என்பதன் அதற்கு பொருத்தமான சூழலும் அனுபமிக்க சூழலையும் கட்டியெழுப்பும் பிரதேசமாக சிறுவர் நட்புறவு பிரவேசத்தை இனம் கண்டு சகல ஆரம்ப பாடசாலைகளை 6 கோணங்களின் ஊடாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.2.1 இணைந்த அபிவிருத்தி பிரவேசம்

சிறுவர் கூட்டுறவு பிரவேசத்திற்காக ஆரம்ப பாடசாலைகளில் பணபுசார் தரமிக்க சூழலை உருவாக்குவதற்காக மேற்கொள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் வழிக்காட்டல்களை தயாரிக்கப்படுவதற்காக யுனிசெப் உதவி மற்றும் தொழில்நுட்ப உதவிக்கு அமைய 2007 தொடக்கம் அமுல்படுத்தப்பட்டது.

மஹிந்தோதய 1000 இடைநிலை பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்கு இணைவாக ஆரம்ப பாடசாலை வலையமைப்பு சிறுவர் நட்புறவு பிரவேசத்திற்கமைய அபிவிருத்தி செய்ய கல்வி அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தலையீட்டுடன் அபிவிருத்தி செயற்பாடாக 2012ம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஒரு பாடசாலைக்கு 5 இலட்சம் ரூபா நிதி வழங்கல் 5000 பாடசாலைகளை வழங்கப்பட்டதுடன் இதன் மூலம் பாட சாலைகளுக்கு சுத்திகரிப்பு வசதி மற்றும் குடிநீர் வசதிகளை விருத்தி செய்வதற்கும் பௌதீக சூழலை கவர்ச்சிமிக்கதாக தயாரிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஜனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டுடன் மாகாண சபைகளுடன் இணைந்து தேர்தெடுக்கப்பட்ட 25 பாடசாலைகளில் சகல ஆரம்ப பாடசாலைகளும் பலதுறைசார் பங்களிப்பின் ஊடாக மாதிரி பாடசாலைகளாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**3.2.1 அட்டவணை : சிறுவர் ஆரம்ப பிரவேசத்திற்கமைய அபிவிருத்தி செய்யப்பட்ட ஆரம்ப பாடசாலைகள் எண்ணிக்கை**

| மாகாணம் | 2012 | 2013 |
|---|---|---|
| மேற்கு | 160 | 304 |
| மத்தி | 152 | 539 |
| தெற்கு | 184 | 486 |
| வடக்கு | 129 | 283 |
| வடமத்தி | 232 | 340 |
| வடமேல் | 177 | 390 |
| சப்ரகமுவ | 178 | 336 |
| கிழக்கு | 97 | 136 |
| ஊவா | 369 | 508 |
| மொத்தம் | **1,678** | **3,322** |





### 3.2.2. 50 மாணவர்களை விட குறைந்த பாடசாலை அபிவிருத்தி செய்தல்.

50 மாணவர்களை விட குறைந்த பாடசாலை எண்ணிக்கைணை ஆண்டு தோறும் அதிகரிப்பதும் இதில் ஏதேனும் ஒரு பாடசாலை எண்ணிக்கையில் சகல ஆண்டுகளிலும் பிள்ளைகள் இண்மையினால் மூடப்படும் நிலை யில் கிராமபுர மாணவர்களின் கல்விக்கு எழுந்துள்ள பிரச்சிணையை தீர்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையுடன் விஷேட வேலைத் திட்டங்களினால் அறிமுகப்படுத்தப்பட்டன. அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்று அவ்வாறான 1552 பாடசாலைகள் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன .

**3.2.2 அட்டவணை : அபிவிருத்தி செய்யப்பட்ட 50 மாணவர்களை விட குறைந்த பாடசாலைகளின் எண்ணிக்கை**

| மாகாணம் | அபிவிருத்தி செய்யும் பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு | 93 |
| மத்தி | 242 |
| தெற்கு | 136 |
| வடக்கு | 189 |
| வடமத்தி | 115 |
| வடமேல் | 195 |
| சப்ரகமுவ | 170 |
| கிழக்கு | 154 |
| ஊவா | 258 |
| மொத்தம் | **1552** |

இவ்வேலைத்திட்டத்தின் பயனாக

- சகல வலயங்களிலும் குறைந்த பட்சம் 2 பாடசாலைகள் ஏனும் மீள திறக்க முடிந்ததுடன்.
- 50மாணவர்களை விட குறைந்த பாடசாலைகளுக்கு மாணவர்கள் சேர்வு 12 %னால் அதிகரிப்பினை காணமுடிகிறது.





மீளத் திறக்கப்பட்ட செவனபிட்டி ஆரம்ப கல்லூரி



மீள திறக்கப்பட்ட கலுகல ஆரம்ப கல்லூரி

## 3.3 விஷேட அபிவிருத்தி தேவைகள் கொண்ட பாடசாலைகளுக்கான வேலைத்திட்டங்கள்

### 3.3.1. தேசிய பாடசாலைகள் அபிவிருத்தி

நாடு எங்கிலும் 342 தேசிய பாடசாலைகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இப் பாடசாலைகளில் முகாமைத்துவம் தொடர்பான நேரடிப் பொறுப்புக்கள் கல்வி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன.

#### 2013 ம் ஆண்டின் முன்னேற்றங்கள்

- ♦ தேசிய பாடசாலைகளில் மாணவர்களின் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் பண்புசார் விருத்தி.
  - * க.பொ.த (சா.த) மற்றும் (உ.த) பரீட்சைகளுக்காக கருத்தரங்கு நடத்துதல் மற்றும் க.பொ.த (உ.த) கருத்தரங்கு களுக்கான இறுவெட்டுக்களை விநி-யோகித்தல்.
- ♦ தேசிய பாடசாலைகளின் உபகரணங்களை புணரமைத்தல்.
  - * சங்கீத உபகரணங்களை புணரமைப்பதற்கான ஒரு பாடசாலைக்கு ரூபா 60,000 வீதம் 2ம் தேசிய பாடசாலைகளுக்கு கல்வி சேவைகள் அமைச்சின் ஊடாக ஒதுக்கீடுகளை வழங்குதல்.
  - * தேசிய பாடசாலைகளில் தளபாட உபகரணங்களை புணரமைத்தற்கு ஒரு பாடாசலைக்கு 25,000 வீதம் வழங்குதல்.
- ♦ தேசிய பாடசாலைகளுக்காக தளபாட உபகரணங்களை வழங்குதல்.
  - * 36டுப்ளோ, இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகித்தல்.
